**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 193/2023**

**Prosecution Witness : 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | மரு. ஜோசப் கிறிஸ்டோபர் பாபு | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு. தேவதாஸ் | **Calling** | : | |
| **Village** | : | JCB மருத்துவமனை | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 52 |
| | | | **Dated** | : | 26.08.2025 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 10 (பட்டியல் சாட்சி 10), **மரு. ஜோசப் கிறிஸ்டோபர் பாபு** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது JCB தனியார் மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணியாற்றுகிறேன். கடந்த 04.12.2021ம் தேதி அன்று பிற்பகல் 03.37 மணியளவில் 37 வயதுடைய செட்டியநாயக்கன்பட்டியை சேர்ந்த திரு. மனோஜ் படேல் என்பவர், அவருடைய சகோதரர் திரு. சதீஸ் என்பவருடன் JCB மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தபோது, அவர் தன்னை அடையாளம் தெரியாத ஒரு நபர் அதே தினத்தன்று பிற்பகல் 03.15 மணியளவில் சிவசக்தி சாமி மரமில் அருகே தன்னை தாக்கியதாக கூறினார். அவருக்கு கீழ்க்கண்ட வெளிக்காயங்கள் காணப்பட்டன.

1) இடது பக்க கழுத்துப் பகுதியில் 6x3x2 cm அளவில் ஒரு வெட்டப்பட்ட சிதைந்த காயம்,

2) இடது பக்க தாடையில் 4x2x1 cm அளவில் ஒரு வெட்டப்பட்ட சிதைந்த காயம்,

3) இடது பக்க கன்னத்தில் 5x2x1 cm அளவில் ஒரு வெட்டப்பட்ட சிதைந்த காயம்,

4) இடது பக்க கழுத்துப் பகுதியில் 5x2x1 cm மற்றும் 3x2x1 cm அளவில் இரண்டு வெட்டப்பட்ட சிதைந்த காயங்கள்,

5) கழுத்துப் பகுதியில் பின்புறத்தில் 3x2 cm அளவில் ஒரு இரத்தக் கட்டு,

6) இடது பக்க கரோட்டின் இரத்த குழாய் பல்ஸ் நன்றாக இருந்தது. அவருக்கு MRI Scan எடுத்துப் பார்க்கப்பட்டபோது, இடது பக்கத்தில் Internal Jugular தமனி காயம்பட்டு காணப்பட்டது. அதனால் நோயாளி மதுரைக்கு மேல் சிகிச்சைக்காக அன்றைய தினமே அனுப்பப்பட்டார். மேற்படி விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ.** 6. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

நான் மருத்துவமனையில் எடுத்த MRI Scan மற்றும் X-ray ஆகியவை மேல் சிகிச்சைக்காக நோயாளியிடமே கொடுத்து அனுப்பப்பட்டது. இரத்தக்கட்டு கூர்மையான ஆயுதத்தாலோ ஏற்படாது என்றாலும், முனை மழுங்கிய பொருட்களால் மட்டுமே ஏற்படும் என்றால் சரிதான். 1 CM க்கும் குறைவான ஆழம் உள்ள காயங்கள் தோல் அளவிலே ஏற்பட்டுள்ள காயங்கள் என்றால் சரிதான். ஒரு நபர் கூர்மையான பொருட்கள் மீது விழும்போது இது போன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால், ஒன்றுக்கு மேற்பட்ட காயங்கள் இருப்பதால் அவ்வாறு ஏற்பட வாய்ப்பு இல்லை. மேற்கண்ட காயங்களை காயம்பட்ட நபர் ஒரு கூர்மையான

ஆயுதத்தை வைத்து தனக்கு தானே ஏற்படுத்திக் கொள்ளலாம் என்றால், அதற்கு வாய்ப்பு உள்ளது.

Taken down by me/before me in open court on 26.08.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.